செய்தி குறிப்பு எண்.18 நாள்.30.4.2009

## தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் மே தின வாழ்த்துச் செய்தி – 30–4–2009

உழைக்கும் தொழிலாளர் சமுதாயத்தின் உரிமையை உலகுக்கு உணர்த்திடும் மே தினம் உலக நாடுகளால் எழுச்சியுடன் கொண்டாடப் படுகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் "திராவிட இனமே பாட்டாளி இனம்; திராவிடர் கலாச்சாரம் உழைத்து வாழ்வதையே வலியுறுத்துகிறது." என்று கூறி மேதின விழாவை உரிமையுடனும், உவகையுடனும் கொண்டாட வேண்டியதில் நமக்குள்ள உரிமையை வலியுறுத்தினார். அவரது கொள்கை வழிநின்று தொண்டாற்றிடும் இந்த அரசு தொழிலாளர் நலன்களைக் காக்கும் உணர்வோடு தனி அமைச்சகத்தை ஏற்படுத்தி தொழிலாளர் உரிமைகளைப் பேணிக் காப்பதில் எப்பொழுதும் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

இந்தியத் திருநாட்டிலேயே முதன்முதலாக மேதினத்திற்கு ஊதியத்துடன் அரசு விடுமுறை வழங்கி தொழிலாளர் சமுதாயம் மே தின விழாவை சிறப்புடன் கொண்டாடி மகிழ்ந்திட வழிவகை செய்தது. மேலும் விவசாயத் தொழிலாளர் நல வாரியம் முதலிய பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களை அமைத்து இலட்சக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. கடந்த காலங்களில் தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்ட 20 சதவீத போனஸ், ஊக்கத் தொகை முதலிய பல்வேறு சலுகைகள் மீண்டும் வழங்கப் படுகின்றன.

நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம்;

விவசாயக் கூலிகளாகவும், வேறுபல தொழில்களில் உழைப்பாளிகளாகவும் திகழும் ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு 6000 ரூபாய் நிதியுதவி;

உழைப்பாளி வர்க்கம் ஓய்வு நேரங்களில் உளம் களிக்க இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்;

தொழிலாளர் குடும்பங்களின் பசிப்பிணி போக்கிட 1 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி;

50 ரூபாய்க்கு மலிவு விலையில் மாதந்தோறும் மளிகைப் பொருள்கள்;

– எனப் பல்வேறு உதவிகளை இந்த அரசு வழங்கி, நாளும் உழைத்திடும் ஏழை எளிய தொழிலாளர் குடும்பங்கள் நலம் பெறவேண்டும்; வளம் பெறவேண்டும் எனத் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. இந்த உணர்வோடு தமிழகத்தில் வாழும் தொழிலாளர் சமுதாய மக்கள் அனைவர்க்கும் எனது மே தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

வாழ்க தொழிலாளர் சமுதாயம்!

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.